**ஊடக அறிவித்தல் இல: PE/2024/04** **2024.09.30**

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

### அஞ்சல் வாக்காளர்களின் வசதி கருதி தேருநர் இடாப்புக்களை காட்சிப்படுத்தல்

2024 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக 2024 ஆம் ஆண்டின் அத்தாட்சிப்படுத்திய தேருநர் இடாப்பு பயன்படுத்தப்பட இருப்பதால், அஞ்சல் வாக்காளர்களின் வசதி கருதி நாட்டின் அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்கும் உரிய 2024 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கள் 2024 அக்டோபர் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து வழமையான அலுவலக நேரங்களில் பின்வரும் இடங்களில் காட்சிப்படுத்தப்படும்:

*அனைத்து மாவட்ட செயலகங்களிலும் (கச்சேரிகளில்)
*அனைத்து பிரதேச செயலகங்களிலும்
*அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும்
} குறித்த அதிகார இடப்பரப்பிற்கு உரிய வாக்கெடுப்புப் பிரிவின் இடாப்பு

மேற்கூறிய இடங்களைத் தவிர,

- அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
- தொழில் திணைக்களம், தொழில் செயலகம், நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.
- கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல.
- பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 243/3/ஏ, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
- அஞ்சல் தலைமையகம், டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.
- கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு, மாளிகாவத்தை.
- நகர அபிவிருத்தி அதிகாரசபை, செத்சிறிபாய கட்டம் I அலுவலக கட்டிடத்தொகுதி, பத்தரமுல்ல என்ற இடத்தில், கொழும்பு மாவட்டத்தின் அரச அலுவலகக் கட்டிடத்தொகுதிகளில் தேருநர் இடாப்புத் தகவல்களை கணினியின் துணையுடன் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கூறிய காட்சிப்படுத்தப்படும் இடங்களுள் மாவட்ட செயலகங்களின் அந்த மாவட்டத்திற்கு உரிய மற்றும் பிரதேச செயலகங்களிலும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் அந்த அதிகார இடப்பரப்புக்கு உரிய புத்தகங்களாக தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்புக்களின் பிரதிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆகையால், அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் அனைவருக்கும் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் உரிய தேருநர் இடாப்பு விபரங்கள் அடங்கிய தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.elections.gov.lk மூலம் தகவல் தொழில்நுட்ப சேவையை (e-service) பயன்படுத்தி விண்ணப்பதாரிகளுக்கு தகவல்களை வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய காட்சிப்படுத்தும் இடங்களிலும் தமது சேவை நிலையங்களிலும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களிடம் சென்று விண்ணப்பதாரி வசிக்கும் மாவட்டத்தையும் அடையாள அட்டை இலக்கத்தையும் சமர்ப்பித்து அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்கு உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், தேசிய அடையாள அட்டை இலக்கம் இல்லாத விண்ணப்பதாரிகளுக்கு தேருநர் இடாப்புப் புத்தகங்களாக காட்சிப்படுத்தப்படும் மேற்கூறிய எந்தவோர் இடத்திலிருந்தும் அத்தகைய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறன்றேல், அரசாங்க தகவல் மையம்

1919 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலமும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பாராளுமன்றத் தேர்தலுக்காக அஞ்சல் வாக்களிப்பதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அதேபோல் கடந்த சனாதிபதித் தேர்தலின்போது அஞ்சல் வாக்கு விண்ணப்பித்த அனைவரும் இத்தேர்தலுக்கு மீண்டும் தமது அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது என்பது வலியுறுத்தப்படுகிறது.**

அனைத்து மாவட்டங்களின் அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களும் அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு அதாவது மாவட்ட தேர்தல்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

**ஒத்த தன்மைவாய்ந்த நபர்களின் பெயர்கள் காணப்படுவதனால், தமது தகவல்களை வேறொருவரைக் கொண்டு பரீட்சித்து அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகள் வேண்டப்படுகின்றனர்.**

அஞ்சல் வாக்கு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பூரணப்படுத்தப்பட வேண்டிய விண்ணப்பங்களை தேருநர் இடாப்புக்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்களிலிருந்து, மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்தும் அதனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அஞ்சல் வாக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைவரதும் விண்ணப்பங்கள் **2024 அக்டோபர் மாதம் 08 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு கிடைக்கப்பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் அதாவது, 2024 அக்டோபர் மாதம் 08 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னர் அவை உரிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும் என்பதுடன், அன்றைய தினம் விண்ணப்பங்களை அஞ்சலுக்கு ஒப்படைத்தல் மாத்திரம், அத்தகைய விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டமைக்கு ஒரு காரணமாக அமையாது.**

அஞ்சல் 2024.10.08 ஆம் திகதி வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமாக இருப்பதனால், அத்திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தினத்திற்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமல் நிராகரிக்கப்படும் என்பதால் துரிதமாக தங்களது விண்ணப்பத்தை உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஊடாக உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறிவிக்கப்படுகிறது.

2024.10.07, 08 ஆம் திகதிகளில் பூரணப்படுத்தப்படும் எந்தவொரு மாவட்டத்திற்கும் உரிய அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஒவ்வொரு தெரிவத்தாட்சி அலுவலருக்கு வெவ்வேறு உறைகளில் இட்டு அருகிலுள்ள மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு ஒப்படைக்க முடியும் என்பதும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்